918

Registered No. 2188

ஓம் பரப்பிரமணேநம:

சர்வசமய சமரஸ சன்மார்க்க சதாசாரம்

சமரஸம்

ஓர் சிறந்த தமிழ்மாதாந்த பிரசுரம்

Vol. 1 | ஜூன்-மீ 1927 | Book 7

OFFICE OF THE REGISTRAR
No. 1
26 JUL 1927
MADRAS

அகக்கண்ணாடி

சமூக ஞானம்

1. ஸ்தோத்திர மாலை
2. சிறு யுகப் பிறப்பு
3. நவநீதம்
4. அணில்களின் துயரம்
5. வர்ணாச்சிரம தருமம்
6. கைத் தொழில்
7. பகவத்கீதை
8. நன்மொழி

சமய ஞானம்

1. நல்லொழுக்கம்
2. ரஞ்சிதம்

வருட சந்தா
உள் நாடுகளுக்கு ரூ. 1—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0

Edited & Published by:—
M. Varadaraja Mudaliar.

S. R. V. Press Villupuram.

உ

ஓம் பரப்பிரமணே நம:

மிகப் புதியது.	# சமரஸம்.	மிகப் பழையது.

செயற்பால தோருமறனே யொருவன்
குயற்பால தோரும் பழி—குறள்.

சாது மகவு.	JUNE. ஜூன்-ப	1927	Vol Book 7

ஸ்தோத்திர மாலா

ஊரனந்தம் பெற்ற பேரனந்தஞ் சுற்ற
முறவனந்தம் வினையினு
லுடலனந்தஞ்செய்யும் வினையனந்தங் கருத்
தோவனந்தம் பெற்றபேர்
சீரனந்தஞ் சொர்க்க நரகமுமனந்த நற்
றெய்வமுமனந்த பேதம்
திகழ்கின்ற சமயமுமனந்தமத ளுன்ஞான
சிற்சத்தியாலுணர்ந்து
காறனந்தங்கோடி வருஷித்த தெனவன்பர்
கண்ணும் விண்ணும் தேக்கவே
கருதரிய வானந்தமழை பொழியுமுகிலை நங்
கடவுளை துரிய வடிவைப்
பேரனந்தம் பேசிமறையனந்தஞ் சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பை
பேசருமனந்த பதஞானவானந்தமாம்
பெரிய பொருளைப்பணிகுவாம்.

சமூக ஞானம்.

சிறுயுகப்பிறப்பும் யுகதர்மமும்

காலத்தை பலபெரிய பிரிவுகளாக முதியோர் வகுத்திருக்கின்றனர். அவைகளுக்கு யுகங்களென்று பெயர். அவை சத்திய யுகம், திரேதாயுகம், துவாபரயுகம் கலியுகம் என நான்காகும். ஒரு யுகத்தில் 60 வருஷங்கள் கொண்ட சிறுயுகங்கள் பலதோன்றி மறைகின்றன. வருடத்தில் மாதங்கள், வாரங்கள், நாட்கள், சாமங்கள், நாழிகை, விநாடி முதலிய காலபாகு பாடுகளடங்கியிருக்கின்றன.

நடைபெறும் கலியுகத்தில் 84 வது சிறுயுகப் பிறப்பை நாம் காணும்படி கருணைகூர்ந்த ஆண்டவன் அருள்பிரகாச பரிணம சக்திக்கு நன்றி கூறுமுகத்து ஓர் கட்டுரையை வரைகின்றோம். மக்களின் மகத்தான சக்திவாய்ந்த சித்தர்கள் பெரிய யுகப்பிறப்பை கொண்டாடுவது வேதமுடிவு, ஆனல் அற்ப ஆசைக்கு அடிமைப்பட்டு அற்ப ஆயுளை தாங்கி கர்மவழியில் பிறந்த மானிடகுழாம்சிறுயுகபிறப்பை கொண்டாடுவதே பொருத்தமென கருதி சென்ற சிறுயுகத்தில் நடந்த சம்பவங்களையும் இனிபுதிய யுகத்தில் தோன்றும் நிதர்சனங்களையும் யோசனைக்கு கொண்டு வருதல் அறிவாளர் கடமையாகும்.

பாண்டு புத்திரர் மறைந்தகால முதல் 83 சிறு யுகங்கள் கடந்தன. பாண்டவர் காலம் வரைக்கும் தெய்வ குணமமைந்த யரசர்களே! நமது பாரதகண்டத்தை அரசுபுரிந்து வந்துள்ளார்கள். அவர்கள் காலத்தில் சூரிய குலத்தரசரென்றும், சந்திர குலத்தரசரென்றும் இரண்டு பெரிய சக்கிரவர்த்திகளின் பாலனத்தின் கீழ் பிரஜைகள் வாழ்ந்தனர். சத்தியமே அவர்களின் ஆசனபீடம். பாண்டு புத்திரர்களுக்கு பின்னர் 30 சிறு யுகங்கள் வரைக்கும் பெருமைக்கும் கீர்த்திக்கு முரிய பல உத்தம அரசர்கள் தோன்றி அரிய பலகாரியங்களை நிகழ்த்தியுள்ளார்கள். இரண்டாவது 30

சிறுயுகங்களில் க்ஷத்திரியர்களல்லாத பலவகுப்பினர்களுக்கும் அரசுரிமை கிடைத்தது அக்காலத்தில் விக்கிர மாதித்தன், சாலிவாகனன், போசன் முதலிய மகாராசாக்கள் தோன்றி வியக்க தக்கதும் ஞாபகச்சின்னமாயுள்ள வைப்புநிதிகள் பலவாயிருக்கின்றன இக்காலத்தில் சாஸ்திரங்கள், பல புராணங்கள் வரையப்பட்டன. பின்னர் 3 வது 30 சிறுயுகம் ஆரம்பத்திற்கு முன்னரே மேல்நாட்டார் மிருகத்தனமான வாழ்க்கையில் மூழ்கியிருந்தனர். புராதன காலமாக கீழ் நாட்டிலிருந்த நாகரீகமும் கீர்த்தியும் மேல்நாட்டில் பரவத்தொடங்கிற்று. தராசுகோல் கீழ்நாட்டிலிருந்து மேல்நாட்டாருக்கேதாழ்ந்தது. அக்காலத்தில் கிறிஸ்து பிறந்தார் மிருகத்தனமான மக்களை சீர்படுத்த தமது உயிரை வழங்கினர். அதிலிருந்து மிகப்பரபரப்புடன் மேனடுகள் நாகரீகம் சன்மார்க்கங்களின் ஊற்றைதிறந்துவிட்டன. மேல்நாட்டிலிருந்து உலகமெங்கும்பரப்புவதற்கு பல கிருஸ்து அடியார்களும் தங்கள் ஆவிக்கு உலைவைத்தனர் இக்காலத்தில் இந்தியாவில் அரசபீடங்கள் செவ்வனனே நடைபெற்றதாயில்லை. மேனடுகளிலிருந்து பல மதத்தினர் இங்கு வந்து அரசாங்கத்தையும் இந்திய நாகரீகத்தையும் புராதன ஞானவான்களின் சின்னங்களையும் நிர்துளி செய்யவும் தங்களது சித்தாந்தங்களையும் இந்தியாவில் பரப்பவும் முன் வந்தார்கள். கலகமும்? கொள்ளையும்சதாவழங்கி முழங்கிவந்தன என்றாலும் தென்னட்டில் வீர, சோழ பாண்டிய, அரசர்கள் அரசாண்டு வந்த அக்காலத்தில் ஆள்வார்களும், நாயன்மார்களும் தோன்றி இந்து மதம் அழிந்து போகாதபடிக்கு தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம்செய்துள்ளார்கள். பொதுவாய் 30 சிறு யுகத்துக்கு ஒரு தரம் ஓர் நாட்டின் நிலைமை பெரும்பாலும் மாறிக் கொண்டே வருகின்றன. நிற்க

சுமார் 120 வருஷமாகத்தான் இந்தியா ஆங்கில ஆக்ஷியில் சமாஸமும் சமாதானமுறையில் அரசுபுரிந்து வருகின்றது. சென்ற சிறுயுகத்தில் தான் ஆங்கில ஆக்ஷியின் பலமான அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது. இந்தியாவிலுள்ள பல சிற்றரசகள் ராஜ்ஜியத்தை இழந்தனர் நீதி சாஸ்திரத்தின்படியும், மனச்சாக்ஷியின்படியும் அரசு புரிந்தகாலம் போய், சட்டத்தின்படி அரசியலை ஆற்றி

வந்தார்கள். அக்காலத்தில் ஐந்துநிமிஷத்தில் ஆலோசித்து தீர்ப்பு சொல்லும் காரியங்கள் பலவருஷமும் சட்டத்தை கையிலேந்திக் கொண்டே ஊடாடும் காலமாய் விட்டது. ராஜ தந்திரம் ராஜு வதந்திர முறைகள் பலப்பட்டன. வியாபார முறைகள் பிரசித்தி பெற்ற முறையில் நடைபெற்றன. மேல் நாடுகள் செல்வ வளம் பெற்றன. கைத்தொழில்களெல்லாம் மிஷன் தொழில்களாகி விட்டன. உன்னதமான 32 அடுக்கு மாடங்களுள்ள நகரங்களும், இருப்புப்பாதைகளும், நீராவி கலம் ஆகாயவிமானம் முதலிய சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. வர்த்தமானப் பத்திரிகைகள் புறப்பட்டன. உத்தம பல தர்மங்கள் நாசமாக்கப்பட்டன. உண்மை தத்துவமல்லாத பல நவீன தர்மங்களுக்கு முடி சூட்டப்பட்டன. எரிமலை, வெள்ளம் அக்கினி, சோரம் முதலிய சம்பவங்கள் இது வரைக்கும் உலகத்தில் நடைபெறாத பயங்கரமுறையில் தோன்றின என்றும் நடைபெறாத ஜெர்மனி கோரயுத்தம் நடைபெற்றன. பெரிய பஞ்சங்கள் உயிர்களை வதைத்தன. பெருத்தமேடு பெரிய பள்ளம் போல் ஒருபக்கம் கோடீஸ்வரர்களும் மறுபக்கம் பிச்சைக்காரர்களுமாக ஏற்பட்டன. ஆதிகாலத்தில் 1000, 500, 300 200, 100, 50, 10, 5, 1. 0 என்னும் வரிசைக்கிரமமான செல்வாக்குகள் ஆங்கில முறையில் கோடி, லக்ஷம், ஆயிரம், 100, 0,0,0.0, 0.0, என்ற தாரதம்மியத்திற்கு வந்துவிட்டன. தாதாபாய், திலகர், கோகலே, ஆனந்தமோகன்போஷ் விவேகானந்தா, ஜீ. சுப்ரமண்ய அய்யர் முதலிய அரிய தேசாபிமானிகள் தோன்றி மறைந்தனர். யதேச்சாதிகாரமுறையில் நடந்த ராஜாங்கங்கள் குடியாக்ஷி முறைமையில் நடந்துவர தலைப்பட்டன. சென்ற யுகம் செல்லட்டும். அதற்கு ஆசிகூறி யனுப்பி விடுகின்றோம்.

வரும்யுகம் வருக? நாம் அகமலர்ச்சியோடு நன்குவர வேற்கின்றோம். ஆனால் சென்ற சிறுயுகத்தில் நடைபெற்ற பல அம்சங்களுக்கு முறணாகபுதிய யுகத்தில் தோன்றும், சாத்வீகமான ராஜீய முறைகள் நிகழும் மெஷின்களால் செய்யப்பட்ட சாமான்கள் பல கைகளால் செய்யப்படும் இந்திய சநாதன தர்மங்கள் பலவற்றிற்கு உயிர் வரும். வர்ணாச்சிரம தர்மங்கள் ஓர் வழிப்படும் சில்லரை பிரிவுகளெல்லாம் மாய்ந்து குறிப்பிட்ட முக்கிய பிரிவு

களில் ஐக்கியமாய்விடும். ஆயுதப்போரும், ஆத்மபோரும் சமரஸமாகவே நடைபெறும், சொல்லுதற்கு இயலாத பல அரிய நூதன சம்பவங்கள் நிகழ்ச்சிபெறும், என்றும் கண்டிராதகாக்ஷிகளும், மரணங்களும் எதிர்படும் பயங்கரமான பூமியதிர்ச்சிகளால் ஜனங்கள் நாசமாக்கப்படுவார்கள். பிர்மஞானிகள் உலக க்ஷேமத்தின் பொருட்டு தோன்றுவார்கள். ராஜாங்கம் கூடியவரையில் சத்தியம் பாதியும் அசத்தியம் பாதியுமாக சமரஸமுறைக்கு சொஞ்சம் இயற்கைதேவியினுல் தூண்டப்படுவார்கள். மதங்கள் தனிப்படையாகவே நடைபெற்ற போதிலும் ஒன்றிற்கொன்று கொண்டு வளரும் குரோத தன்மைகள் நீங்கி சமரஸம் ஏற்படும். சமயகோவில் மடங்களெல்லாம் ஓர் புதிய சமரசமுறைக்கு இடம் கோலிக்கொள்ளும். தெய்வதூஷணைகள் கூடிய வரையில் குறையும். ஆச்சாரம் ஒழுக்கங்களும் இந்து சநாதன தர்மத்துக்கு முறணுகாத ஓர்நவீன நாகரீகமாய் மாறிவிடும். புதிய சிறிய யுகத்தை தரிசிக்க அனுக்கிரகித்தமுழுமுதற் பொருள் நம்மையும் நமது சந்தாநேயர்களையும் பொது மக்களையும் யுகத்தின் இறுதியையும் காணும்படி கடாக்ஷிப்பாராக.

நவநீதம்.

கிறிஸ்துமதத்தில் ஒவ்வொரு ஜீவனின் மகிமையும், அது உஜ்ஜீவிக்கத்தக்க சுதந்தர்யத்தையுடையது, என்ற தத்துவத்தை வற்புறுத்துகின்றது.

மகம்மதுமதத்தின் முழுகொள்கைகளும் இந்த மனித சுதந்தரத்தை வெளிப்படையாய் காட்டியிருப்பது மல்லாமல் அனுபோகத்திலும் வீழ்ந்து கிடக்கின்றது.

இந்துமதத்தில் எல்லா ஜீவர்களும் பொது ஸமஷ்டியில் ஈஸ்வரனுடைய அம்ஸமென்று கூறுகின்றது.

கிறிஸ்து மதக்கொள்கைள் ஜீவன் மானிடவர்க்கத்தில் எவ்வித அற்பநிலையை யடைந்திருந்தாலும் அவன் தனக்குரிய ஸ்வதந்தரங்களை யடையுமாறு அவனை கைதூக்கி விடவேண்டியது பிறர் கடமை யென்றும், அதற்குரிய முயற்சிகளை மேலோர்கள்

(பிராம்மணர்கள்) கைக்கொள்ள வேண்டுவது முக்கியமென்பதும் அம்மதத்தின் உத்தம கொள்கையாகும். பாவம் செய்கிறவர்களை அவர்கள் தள்ளி விடுவதில்லை. கிறிஸ்து மதம் பரவும் பிரதேசங்களில் அவர்கள் தத்துவ சாஸ்த்ரங்களை போதிப்பதிலாவது, கற்பதிலாவது விசேஷமாய் முயற்சிக்கிறதில்லை. கிறிஸ்து மதம் பரவும் பிரதேசங்களில் லௌகீக வித்தைகளை கற்பிக்கும் பள்ளிக்கூடங்களும் வியாதிகளுக்கு சிகிச்சை செய்யக்கூடிய ஔஷதாலயங்களும், ரணவைத்திய ஸ்தானங்களும் செவிடு, குருடு, ஊமை, நொண்டி முதலிய அவயவக்குறைவடைந்தவர்கள் படிக்கத்தக்க வித்தியாசாலைகளும், பலகுற்றங்களுக்காக ராஜதண்டனையடைந்தவர் சிறைச்சாலையிலிருக்கும் காலத்திலும் அவர்களை நல்வழிப்படுத்தும் போதனை முறைகளும், கைத்தொழில்களும் அவர்கள் சிறையிலிருந்து மீளும் காலத்தில் அவர்களை துர்வழிகளிலிருந்து மீட்கும் ஏற்பாடுகளும், களவு கொள்ளை முதலிய தீச்செயலையே தொழிலாகக்கொண்ட ஜாதியாரை பெருமைபடுத்தி பழக்க உயர்ந்த விலையுள்ள சன்யாசி உடைகளை அணிந்து கம்பீரமாக வாழ செய்திருக்கும் வஸதியாகிய இரக்ஷண்ய சேனை (Salvation army) முதலிய சன்மார்க்க கூட்டங்களும். ஏழைகள் வெட்கம், மானம், ஆண்மையிழந்து பிச்சை யெடுத்து உயிரை வளர்க்காமல் கௌரவமாக காலக்ஷேபம் செய்யக்கூடிய கைத்தொழில் சாலைகளும், பெற்றோர்களால் விவாகமில்லாமலும், தாரித்திரியத்தினாலும், அல்லது தாய்தந்தையர் குரூரமனதினால் வெருட்டப்பட்ட திக்கற்ற குழந்தைகளை எடுத்து வளர்க்க அநாதாலயங்களும், கைம்பெண்களை கடைத்தேற்ற சரண்யாலயங்களும் ஏற்படுத்தியிருப்பது சாதாரணமாய் பார்க்கக்கூடியதாயிருந்தாலும் இன்னும் விகாச முறையில் தனிகர் மத்திலிருந்து தவறி வீழ்ந்தவனுக்கு கைதாக்கி உதவும்பாகுபாடுள்ளது. மதனிதன் உலக விகாஸ முறையில் ஹீனஸ்திதியை யடைந்திருந்த போதிலும் அவன் கௌரவமானவன், அவன் அரிய பெருமைக்குரியவன்; அவனைக் உத்தாரணம் செய்யவேண்டியது அவனை காட்டிலும் உயர்ந்த நிலைமையிலுள்ளவர்கள் கடமை யென்ற தத்துவமே அம்மதத்தின் சித்தாந்தம்.

மகம்மதிய மதத்தின் கொள்கைகளாவது கூறுவதற்கரியதொடைகள் நிகழாவிட்டாலும் எல்லா மனிதரும் சகலத்திலும் சமரஸமாக வாழ வுரிமை யுண்டு. ஆண்டவனை இடையில்தரகர்களில்லாமல்தானே தொழவும் துதிக்கவும் பாத்ய முண்டு அடிமைப்படுத்தி வாழும் குணத்தை முற்றிலும் நீக்க வேண்டியது வட்டி வாங்குவது போதை கொடுக்கக்கூடிய வஸ்துக்களை புசிப்பது முதலியவைகள் கனவிலும் கூடா. பிரதிதினமும் ஐந்துவேளைகளில் கடவுளைதொழ வேண்டும். பெண்களை பார்ப்பதினாலே ஆடவர்கள் தங்கள் மெய் நிலை துறந்து துன்மார்க்க மிழைப்பர், ஆகையால் பெண்கள் கோஷா நிலையிலிருக்க வேண்டும். இவை போன்ற பல முறைகளை போதிக்கின்றது.

இந்து மதக் கொள்கையாவது துன்மார்க்கர் கொடியர் முதலிய பாவிகளையும் அவர்கள் உறவுகளையும் அப்புறப்படுத்த வேண்டும். அவர்கதி அதோகதிதான். அவர்கள் ஜாதியிலிருந்து விலக்கப் பெற்று இனியாவது குற்றமற்ற வழிகளையடையா வண்ணம் தள்ளப்படுகிறார்கள். கிறிஸ்து மதத்தைப் போல் பாவிகளை நேசிக்கும் நோக்க மில்லாவிட்டாலும், கடவுளுடைய பக்தர்கள் பிராம்மணர்கள், மேலோர்கள் இவர்களுக்குஉபகாரம் செய்யவும், இவர்களை போற்றி காப்பாற்றவும் வசதிகளிருக்கின்றன. தர்மத்தின் உன்னத சிகரம் இந்து மதமே. கிறிஸ்து மதத்தைப் போல் சமூக மக்களை உயர்வு படுத்து முறையில் தர்மத்தை செய்யாதொழிந்தாலும் சமய ஆச்சார அனுஷ்டான விஷயங்களில் மகத்தான தர்மங்களடங்கி யிருக்கின்றன. ஏழைகளுக்கு பிச்சையிடவும் தண்ணீர் பந்தல், மடம், சத்திரம், கோவில் குளம் முதலிய பல தர்மஸ்தாபனங்கள் நடைபெறுகின்றன. உலகமெல்லாம்முகர்ந்து கொண்டு போகக்கூடிய ஞானமும் தத்தவமும் கொழுமை யோடு பயிராகின்றன, இப்பொழுதிருக்கும் இந்தியர்களின் மனக் கோழைகளால் செய்யக் கூடாத உன்னதமும் உத்தமு மான பல உயர்ந்த வேத சாஸ்த்திர ஆராய்ச்சிகளும் பல இருந்த போதிலும் அது இனி எதிக்காலத்திலும் உலக மக்களுக்கு ஞான கன் மலையிலிருந்து விழும் நீர் வீழ்ச்சி போல் பலனளிக்கும் என் பதில்

ஐயமில்லை. இப்பொழுது இருக்கும் நிலைமை சில விஷயங்களில் கேவலமான நிலையிலிருந்தாலும் அவைகள் கூட 400-வருடங்களுக்குமுன்பு உத்தமமான நிலையிலிருந்ததாகவே சாஸ்த்திரத்தின் ஆராய்ச்சியில் படுகின்றது.

இந்துமதத்தில் சிரமமில்லாமல் ஒவ்வொரு ஜீவனும் வாழ வேண்டிய சூக்ஷம விதிகளை போதிக்கின்றது. கடவுளை வழிபடுவதற்கு பலவித பாகுபாடுகள் ஏற்படுத்தியிருப்பதோடு ஜீவகாருண்யத்தின் முடிவு கொள்ளப்பட்டிருக்கின்றது வானசாஸ்த்திரம் சங்கீதம் போன்ற உத்தம சாஸ்த்திரங்களும் வித்வான்களும் மலிந்திருக்கின்றனர் மொத்தத்தில் இந்து மதம் சமய ஞானத்தையே அடிபீடமாக கொண்டு நிகழ்கின்றதினால் வேறு தேசத்தாரோடு சமத்துவமாக வாழக்கூடிய சமூக பிரச்சினைகள் இந்து மதத்தில் முற்காலத்திலிருந்திருந்தாலும் தற்காலம் அனுஷ்டானத்திற்கு கொண்டுவரவில்லை.

அணில்களின் துயரம்.

கைம்மாளன் "மனிதன் நானல்ல; நான் அம் மனிதனுக்கு அடிமை வேலை செய்பவன்" என்றான் சிங்கம் "அங்ஙன மாயின் அவனின் உறைவிட மெங்கே" என்றது.

கைம்மாளன் "இங்கு சமீபத்தில் தானுளது; நான் காண்பிக்கின்றேன். ஆயின் யான் நமஸ்கரித்து ஓர் வாக்கு கேட்கிறேன் அவ்வரும் "காரியமாது" என்பதே தயை செய்து சொல்லமன்றாடுகிறேன்.

சிங்கம் சற்று தாமதித்து "என்னுடன் வந்திருக்கும் இந்த பரிவாரங்களெல்லாம் மனிதர்களின் ஜீவஹிம்ஸை யென்னும் அடாத செயல்களை கண்டிக்கிறார்கள்; அதற்கு தக்க பரிகாரம் தேடவே தேடுகின்றேன்! என்று கோபாவேசமாய் கர்ஜித்தது.

கைம்மாளன் உடல் நடுங்கினாற் போல் பாவனை காட்டி வணங்கி கை கூப்பி "ஐயனே? எனக்கும் அப்பாவிகள் சரிவர கூலி கொடுப்பதில்லை; வாயில்களில் நாயைப்போல் காத்திருந்து

பெறவேண்டியிருக்கின்றது. அப்படிப்பட்டவர்களை நாஸ்தி செய்ய நானும் துணை நிற்கின்றேன்! என்று சொல்லி சற்று நிதானித்து "ஐயே! மற்று மொரு உத்திரத்துக்கு தாங்கள் தலை சாய்க்க கோருகிறேன்" என்று சொல்ல

சிங்கம் அதென்னவென தலையசைத்தது:

கைம்மாளன் "இங்குள்ள பரிவாரங்களுக்கு என்ன ஹிம்சை அவர்கள் செய்கிறார்க ளென்பதை நானும் நேரில் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன். ஆலோசியாமல் செய்வதினால் மகத்தான பாவமல்லோ வந்து சேரும். பாவம் யொழிக, புண்ணியம் செய்க யென்பது வேதநெறியல்லவோ! தாங்கள் மிருகபதியாயிருந்து அவ்வாறு அவசரப்படுவது பெருமை யாகுமாவென்று சொல்லவே சிங்கமும் அதற்கிணங்கி தன்னுடன் வந்திருக்கும் ஜீவகுழாங்களை வரிசையாக நிறுத்தி "உங்கள் குறைகளைசொல்லுமின்" என்றது.

மீன்கள் குற்றமற்ற பிராணிகளாகிய நாங்கள் ஜலத்தில் வாழ்வதை அவர்கள் தூண்டியாலும் வலைகளாலும் பிடித்து கொல்லுகிறார்களே? அது உமக்கு தெரியாதா என்று கேட்டன.

கைம்மாளன் ஜலம் வடிந்தகாலத்தில் நீங்கள் எல்லோரும் உயிர் மாளுவது நிச்சயம்; தவிர பக்ஷிகளும், பல ஜீவர்களும் உங்களை பிடித்து கொன்று தின்கிறார்கள்; உங்களை வலை கட்டி பிடிக்காவிட்டால் கோடிக் கணக்கான சினை பீச்சும் மீனினங்கள் ஓர் வருடத்தில் ஜலமிருக்கும் இடம் தெரியாமல் பரவிவிடுவீர்கள் அப்பொழுது ஜலத்தை எப்படி உபயோகப்படுத்துவது? என்னும் கேள்விகளை பொரித்தான்.

மீன்கள் ஜலம் வடிந்த காலத்தில் இறப்பது வாஸ்த்தவமேயாயினும் உலகத்திலுள்ள எல்லா பொருள்களும் ஜீவர்களும் அழிவது உண்மை, ஆனால் அதில் ஒரு விசேட மொன்றுளது அற்ப ஜீவர்களுக்கு அற்ப ஆயுளும் பெரியஜீவர்களுக்கு நீண்ட ஆயுளும் வகுக்கப் பட்டிருககின்றன. சில ஜீவர்கள் ஓர் விநாடியிற் அழிகின்றன. சில ஒருமணிக்குள் அழிகின்றன. சில பிராணிகள் ஓர் பகலில் பிறந்து மாலையில் அழிகின்றன. சில இரவில்

பிறந்து காலையில் அழிகின்றன. சில, மாதம், ஆறு மாதம், 1 வருடம், 10 வருடம், 30, 50, 100, 1000மாக முறையே கோடிக் கணக்காண வருடங்கள் ஜீவிக்கும் பிராணிகள் இவ்வுலகிலிருக்கின்றன. எங்கள் அற்ப உருவத்துக்கும் உயிர்க்கும் எற்றவாறு மழைகாலத்தில் பிறந்து, வெயிற்காலத்தி லிறப்பது இயற்கையாகும். நாளை இறப்பவனை இன்றே கொல்ல மனந்துணியுமா? இரண்டாவது பக்ஷிகளும், பிராணிகளும் அற்ப அழிவு பெற்ற உயிரினங்களாகையால் அவைகளுக்கு இயற்கையாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன.

அவைகளைப்போல் மனிதன் நன்மை தீமையறியாதவனு? மூன்றுவதாக நாங்கள் ஜனித்தவுடன் கோடிக்கணக்கான சிறிய குஞ்சுகளெல்லாம் அப்படியே பெரிய மீன் சின்ன மீனை விழுங்குவதென்றபடி நாங்களே எங்களினத்தை விழுங்கி குறைத்து கொள்வோம். அதினல் ஜலத்துக்கு யாதொரு பேதமுமேற்படாதவாறு ஆண்டவன் ஆஞ்ஞையை நீர் அறியீர் போலும், என்று விடையளித்தன.

நாங்கள் தண்ணீரிலுள்ள நுட்பமானதும் மனிதர்களுக்கு தீங்கிழைக்கக்கூடியதுமான கிருமிகளை தின்று ஜலத்தை பரிசுத்தப் படுத்துகிறேம். ஜலத்தை பரிசுத்தப்படுத்தவே ஆண்டவன் எங்களினத்தை படைத்துள்ளான்.

கைம்மாளன் புன்னகை கொண்டு நீங்கள் சொல்லுவ தெல்லாம் நியாயம், நியாயம் யென கண்மலர்ந்து புறுவினங்களை நோக்கினன். அங்குற்ற கபோதக் கூட்டங்கள் தங்கள் குறைகளை சொல்லத் தொடங்கின.

தொடரும்.

வர்ணுச்சிரம தர்மம்.

வைசியதர்மம் :— பிராமணர் க்ஷத்திரிய தர்மத்தை அபேக்ஷிக்க க்ஷத்திரியர் வைசியர் தொழிலில் ஈடுபட்டு இப்பொழுது உலகத்தில் வியாபார வாசனையை நுகாராதவன் லக்ஷத்தில் ஒருவனவது உண்டோ யென்பது சந்தேகம். வைசிய தர்மம் அதன் கொள்கைக்கு சரியான முறையில் நடைபெருமல் மக்களை ஏமா

ற்றுவதில் சிந்தை செலுத்துகின்றது. காரணம் அளவுக்கு மீறி வியாபாரிகள் மலிந்துவிட்டதால் வியாபாரத்தில் லாபம் குறைந்து உத்தமவியாபாரம் பித்தலாட்ட முறையாகிவிட்டது. பழைய காலவியாபாரிகள் யோக்கியதை நிகரற்றது. அவர்கள் நாணயத்திலும் உபகாரத்திலும்மிகுந்தவர்கள் பொய்யுரையாமல்வியாபாரம் செய்து தங்களது ஜீவனத்தை நடத்தி வந்தார்கள் இப்பொழுது அம் முறைகள் போய்விட்டன. இப்பொழுது நடக்கும் வியாபாரங்களெல்லாம் பெரும்பாலும் நஷ்டமே வந்து முடிகின்றன. யாராவது பொருளாளிகளுண்டாயின் அவர்கள் வியாபாரத்தின் ஊதியத்திலல்ல; நாணயத்தின்பேரில் ஜனங்களிடத்தில் பெற்ற பொருளை மோசம் செய்தவனுகவே யிருத்தல் வேண்டும். காரணம் வியாபாரிகள் அளவுக்கு மிஞ்சி பெருகிவிட்டதாலும் சூத்திர தர்மிகளெல்லாம் சோம்பேறிகளாய் தேகத்தை வளர்க்கிறுர்கள் ஒவ்வொரு குடியானவனும் வியாபாரம் செய்ய தலைப்பட்ட தன் பயன் என்னே! தவிர அரசாங்க பாது காப்பும் உதவியுமில்லை யென்பதைப் பற்றி வியாபாரச்சட்டம் என்னும் வியாசத்திற் காண்க. ஆகையால் வியாபாரம் ஒழுங்குபடுவதற்கு உண்மைமுறைகளை யனுசரிப்பதற்கும் குடியானவர்களும் அதிகாரிகளும் வியாபார துறையிலிறங்கி விடாமல் இருந்தால் தான் முடியும்.

சூத்திரதர்மம் ஜனங்கள் மிருகபக்ஷிணி யாகாமல் சாக பக்ஷிணியாய் பெருகுமாறு தானியங்களை பயிர் செய்து அதன்மூல்யமாய் மக்களை ஊட்டுவதாகும். பயிரிடுவதென்ருல் வைராக்கியமும் ஊக்கமும் வேண்டும் ஊக்கத்துக்கு தகுந்தபடி பொருள் ஏராளமாய் வேண்டியிருக்கிறது. "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்று கூறியுள்ளபடியால் பிராம்மண க்ஷத்திரிய தொழில்களை ஒரு காசுமன்னியில் நிறைவேற்ற முடியும். ஆனல் வியாபாரத்தையும் விவசாயத்தையும் மூலதன மில்லாமல் எவ்வாறு நிறைவேற்றமுடியும். இப்பொழுது விவசாய பலன்கள் மழை யின்மையாலும், ஜனங்களிடத்தில் ஊக்கமின்மையாலுமன்று, அதிகாரவர்க்கம் குடியானவர்களின் திரவியத்தை கடுமையான வரியாலும், அபார சிக்ஷையாலும், வஞ்சகத்தாலும், அதிகாரிகளின் வியாபார பெருக்கினுலும் தடாகம்போல் ததும்பியிருந்த குடியானவர்கள் செல்வமெல்லாம் சிதறுண்டுபோயின. ஓர் குடியானவன் கிரமப்படி 8-மணி

நேரம் உழைக்கவேண்டியவன் காலை 4-மணி முதல் இரவு 10-மணி வரைக்கும் 18 மணி நேரம் பாடுபட்டு க்ஷீணித்துபோய்விடுகிறான். அப்படி பாடுபட்டும் கிராமத்தில் இரண்டொருவர் தவிர மற்றவர்களுக்கு 1 மாத போஜனங்கூட கிடைப்பதில்லை பாதிக்கு மேற்பட்டவர்கள் களத்திலேயே கடன்காரர்களுக்கும் அரசிறைக்கும் அளந்துவிட்டு வயிறெறிந்து வீட்டில் வந்து படுக்கிறான். எஞ்சிய ஓர் சாரார் பிச்சாடனமூர்த்தி வடிவங்கொண்டு ஊர் ஊராய் கிளம்பிவிட்டார்கள். ஆகையால் சூத்திரதர்மம் எங்ஙனம் செவ்வையாய் நடைபெறும். குடியானவர்கள் கல்வியிலும் நாகரீகத்திலும் எவ்வாறு முற்படுவது. அந்தோ ஏழை குடியானவர்களின் கஷ்டம் பாவம் பாவம்! பாவம்! பெரிதும் பாவகரமான விஷயமே. இனி சமய தர்மத்தை விவரிக்க அடுத்த பத்திரிகையில் சமய ஞானம் என்னும் தலைப்பின்கீழ் ஒழுங்குபெற விவரிப்போம்.

காடுகளில் வசிக்கும் மறவர், வேடர், குறவர்முதலிய ஜாதியார்களெல்லாம் சூத்திர தர்மிகளல்ல. ஆனால் அவர்களுக்கு விவேகம் உதித்து மிருகபக்ஷிணியாய் திரியாமல், பயிர்செய்து அதன்மூலமாய் தங்களையும் தங்கள் சுற்றத்தாரையும் போக்ஷித்தால் அவர்கள் சூத்திரர்களாவார்கள். சூத்திரர்களென்பது கீழான ஜாதியாரென்பதல்ல; சமய அனுஷ்டானங்களை சரிவரநடத்தி ஜீவஹிம்ஸை நீக்கி, தர்மம், நோன்பு முதலியவைகளைக் கொள்பவன் என்பதே.

வைசியன் என்பது சூத்திரதர்மத்தையும் விதிகளையும் செவ்வையாயுணர்ந்தவன். சூத்திரதர்மத்தை நடாத்த திறமை பெற்ற பிறகே வைசியனாகிறான். அப்பொழுது அதற்கடையாளமாக பூணால்தரிக்கப்படுகிறான். வைசியனுடைய கடமையாவது, சூத்திரதர்மத்தை நடத்துவதைக்காட்டிலும் சமுகத்துக்குரிய தர்மங்களை செய்வது பொறுமையோடும் சூக்ஷும புத்தியோடும் ஜனங்களை வசியப்படுத்தி பண்டமாற்றால் சமயத்துக்கும் சமூசத்துக்கும் துணையாய் வாழ்பவன் அதாவது மக்கள் துணைவன் யென்பதே சுருக்குறையாகும்.

க்ஷத்திரியன் சூத்திர தர்மத்தையும் வைசிய தர்மத்தையும் செவ்வையாய் யனுஷ்டித்து அனுபோகம்பெற்றபின்னரே க்ஷத்திரியனாகிறான். அப்பொழுது அதற்குரிமையாக இரட்டை பூனூல் தரிப்பதோடு மோதிரம், தடி, கிரீடம், யென்றும் அரச சின்னத்தில் ஏதையாவது அணியவும் வேண்டும். அவன் கடமையாவது வைசியர், சூத்திர தர்மிஷ்டிகளின் கடமையை செவ்வையாக உணர்ந்திருப்பதோடு சகல நீதி சாஸ்த்ரங்களையும்உணர்ந்து மன்னுயிர்க்குதன்னுயிரை வழங்குமுகத்துயுத்த பயிர்ச்சியம்பெற்றிருத்தல்வேண்டும். ராஜ தந்திரம் ராணுவ தந்திரங்களையும் உணர்ந்தவனாய் நீதி வழுவாது சமரஸமுறையில் செங்கோலோச்சுபவன் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் புரிபவன். மற்ற உயிர்களுக்கு ஹிம்ஸை செய்யும் பிராணிகளை வதைக்கலாமே யொழிய, தன் உடல் வளர்ப்புக்காக ஜீவவதை க்ஷத்திரியனுக்கும் அணுவளவும் கிடையாது.

பிராம்மணன் மேற்கூறிய மூன்றுவர்ணா சிரமதர்மத்திலும் தேர்ச்சி பெற்றவன். முப்புரி பூனூல் தரித்தற்கு அருகன். அவன்கடமை முதலிலே சொல்லப்பட்டிருக்கிறது. தான் சன்யாசி வடிவத்தோடிருந்துகொண்டு எல்லா ஜீவர்களுக்கு ஹிதம்செய்வது உபதேசத்தால் கீழ் வர்ணாசிரம தரதர்மிகளை மேலான அந்தஸ்துக்கு கொண்டுவருவது. விகாச முறையில் பிராம்மணன் வர்ணாச்சிரம தர்மமெல்லாம் உத்தியோகத்தில் கோர்வை கிளாஸ் கொடுப்பது போல பூனூல் தரிக்கப்படுகிறார்கள்.

☞ குறிப்பு இவைகளெல்லாம் நான்கு வேதத்தின் சராப்படி எழுதப்பட்டு வருகின்றது. உவமானங்களுடனும் மேற்கோளுடனும் ருசுப்படுத்தி எழுதுவதற்கு விரியுமாகையால்நாளடைவில் இப்பொழுது சுருக்கமாக வரையப்படுகிற எல்லா வியாசங்களையும் சுருதி, யுக்தி, அனுபவத்தோடு சமரஸ நோக்குகொண்டு வரையப்படும்.

50ரூ முதல் 500ரூ வரை மாதம் சம்பாதிக்கலாம்!
யேன் கவலைப்படுகிறீர்கள்?

எந்த வேலை செய்வது? எந்த விதமாகச் சப்பாதிப்பது? என்பதாக இனி கவலை வேண்டாம்! நாள் 1-க்கு குறைந்தது ரூ. 2

முதல் 10-வரை சம்பாதிப்பதற்குத்தகுந்த 'கைதொழில்' முறைகளும் புதிய யோசனைகளும் இந்த கைத்தொழில் மூலம் தாங்கள் கற்றுக்கொண்டு தொழில் செய்து சுகமாய் ஜீவிக்கலாம்.

இதில் பலவிதவாசனை சோப்புகள், வார்னிஷ்கள், வர்ணதினுசுகள், மெழுகுவத்தி, நெருப்புகுச்சி, பலவித பெபர்மென்ட் தினுசுகள், பிஸ்கத்துகள், கேக்குகள், பலவித கூந்தல்வளரும் பரிமள தைலங்கள், புஷ்ப அத்தர்கள், சாம்பிராணிவத்திகள், பன்னீர் பரிமளமாவு வாஸ்லயின், முகவசிகரமெழுகு, பரிமளஸ்நாநதூள், ரோஸ்நன்னரி, ஆமன்ட் முதலிய பலவித சர்பத்துகள், ஒமம் வாட்டர், பலவிதமான பல்பொடி, டென்டல்கீரீம், பலவிதலேகிய தினுசுகள், பலவித ஸ்தாந தைலங்கள், பலவிதமான இங்கி தினுசுகள், சாய தினுசுகள், பூட் பாலிஷ், முத்திரை அரக்குகள், சோடாலிமினேட் லெம்ஜீஸ்பவுடர்கள், பால்பவுடர், பலவிதமருந்துதினுசுகள், கறிமாசலே பவுடர், காகிதம், பென்சில், முதலியவைகள் செய்யும் சகல முறைகளும் இன்னும் அநேக ஆயிரமுறைகளும் இதில்வெளிவரும் அமெரிக்கா, ஜெர்மனி தொழில் சாலையில் தொழில் செய்து வரும் அருமையான அனுபவமுறைகளையும் புதையல்அகப்படுவது போல் ஏராளமான லாபத்தை கொடுக்கக்கூடியதாயுமுள்ள இரகசியத்தை தெரிந்துக்கொண்டு தாங்களும் தொழில் செய்து சுகமாய் ஜீவியுங்கள்? பிரதி பத்திரிகைகளிலும் ஐந்துஆறு முறைகள்வெளிவரும்

உயர்ந்த சீமை பல்பொடி.

சீமை (சாக்கு சுண்ணாம்பு	2பவுண்டு
ஆர்ரீஸ் கிழங்கு	2பவுண்டு
சர்க்ககரை	2பவுண்டு
தண்ணீர்	1பவுண்டு
லெவண்டர் ஆயில்	150 தானியஎடை
ஜாதிக்கா தைலம்	150 தானியஎடை
லவுங்க தைலம்	150 தானியஎடை
பெப்பர்மெண்ட் தைலம்	1 அவுன்ஸ்
ரோஜாப்பூ தைலம்	150 தானியஎடை

இவைகளை சேர்த்து பதமாக கலந்து அழகுபடுத்திய டப்பிகளில் பாக் செய்து விற்பனைக்கு தயார் செய்யலாம்.

விக்டோரியா பரிமள செண்ட்.

காசிக் சத்து	10 அவுன்ஸ்
ரோஜாபூ சத்து	5 பைன்ட்
ஆரஞ்சிபூ சத்து	20 அவுன்ஸ்
டேபிரஸ் சத்து	$2\frac{1}{2}$ பைன்ட்
நீலிபுஷ்ப சத்து	5 பைன்ட்
டின்ஷர் சவ்வாது	5 அவுன்ஸ்
சிட்ரன் ஆயில்	150 தானியஎடை

இவைகளை கலந்து சிறுசீசாக்களில் பாக்செய்துகொள்ளவும்.

இந்திய பல் பொடி.

கடுக்காய் பவுடர்	2பவுண்டு
கருவேலம் பட்டை பவுடர்	2பவுண்டு
காசிக்கட்டி பவுடர்	2 அவுன்ஸ்
கருவாபட்டை பவுடர்	1பவுண்டு
கரிசிளுங்கண்ணு இலைத்தூள்	1பவுண்டு

இவைகளை கலந்து பாக் செய்துகொள்ளலாம்.

கூந்தல் வளரும் மல்லிகைப்பூதைலம்.

பாதுமை எண்ணெய்	4பவுண்டு
மல்லிகைப்பூ எண்ணெய் (சத்து)	7 அவுன்ஸ்
ஆயில் ஆப்பெர்க்மாண்ட்	1 அவுன்ஸ்
ஆயில் ஆப் லிமன்	150 கிரேய்ட்

இவைகளை கலந்து சிகப்புவர்ணம் உண்டாகும் வரையில் வைத்து பிறகு பாக் செய்து விற்கலாம்.

வார்னஷ் எண்ணை செய்யும் விதம்.

அவுல் அரக்கு	4பவுண்டு
கிருஸ்ணுயில் மஞ்சள்	4 பைன்ட்

சேர்த்து காய்ச்சி பதத்தில் இறக்கி வாசக்கால் தூண் கதவு களுக்கு பூச உபயோகப்படுத்தலாம்.

பகவத்கீதையின் தமிழ் வசனச்சுருக்கம்.

(பிரதி சஞ்சிகையிலும் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்படும்.)

இந்த பகவத்கீதையின் சிலோகங்கள் சமஸ்கிருத பாஷையின் மஹா பாரதத்திலுள்ளன. சகல காரணனாகிய பரமாத்மா வர்ணவன் லொகானுக்கிரார்த்தமாக கிருஷ்ணபகவானாய் அவதரித்தவனாகையால் பாரதயுத்தத்தின் ஆரம்பத்தில் க்ஷத்திரிய தருமத்திற்கு விருத்தமாய் பந்துநாசத்தைக் குறித்துச் சோகித்த அர்ஜுனனுடைய சோகத்தைத் தீர்க்கும்பொருட்டு அவனையே வியாஜ்ஜியமாகக்கொண்டு அவனுடைய சோகம் தீரும்படி மகா புருஷார்த்தமாகிய மோட்சத்திற்கு ஏதுக்களான பக்தி ப்ரபக்திகளை கர்மஞானோபதேச பூர்வகமாய் பதினெட்டு அத்தியாயங்களுள்ள இந்த கீதாசாஸ்திரத்தில் உபதேசித்திருக்கிறார்.

பதினெட்டு அத்தியாயங்கள்.

1 விஷாகயோக அல்லது சோகவத்தியாயம்—இவ்வத்தியாயத்தில் தர்மத்தை அதர்மமாக பிரம்மித்து நிஷ்காரணமாய் பந்து சினேகத்தாலும், தயையினாலும் துக்கித்துக்கொண்டிருந்த சரணாகதனான அர்ஜுனனைக் குறித்து கூறப்பட்டிருக்கிறது.

2. சாங்கியயோக—இவ்வத் தியாயத்தில் சித்திதபிரக்ஞையென்ற ஞான நிஷ்டையை சாதிக்கிற நித்யாத்மஸ்வரூபம், அசங்க கர்மம் இவை கோசரமான சாங்கியயோகஞானம், அர்ஜுனனுடைய மோகம் தணியும்பொருட்டுச் சொல்லப்பட்டது.

3. கர்மயோக — இவ்வத்தியாயத்தில் பலசங்கமில்லாமல் லோகரக்ஷணார்த்தமாய் ஸத்வாதி குணங்களிலேயோ, சர்வேஸ்வரனிடத்திலேயோ கர்திருத்வத்தை ஆரோபித்துக் கர்மங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகின்றது.

4. ஞானகர்மயோக — இவ்வத்தியாயத்தில் ப்ரஸங்கத்தில் தன் சுவபாவமும், கர்மயோகம் ஞானாகாரமென்பதும், அதன் பேதங்களும், ஞானத்தின் பெருமையும் சொல்லப்படுகின்றன

5. கர்மசன்யாசயோகம்- இந்த அத்தியாயத்தில் கர்மயோக எளிதானதென்பதும், அது சீக்கிரமாய் பலிக்குமென்பதும், அதின் சில பேதங்களும், சுத்தாத்மஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளும் விதமும் சொல்லப்படுகின்றன.

6. ஆத்மஸம்யமேயோக அல்லது அப்பியாசயோக—இந்த அத்தியாயத்தில் யோகாப்யாசம் செய்யும் விதியும், யோகிகள் நான்கு வகையினரென்பதும், யோகத்துச்சாதனங்களும் யோகத்துக்குத்தப்பாமல் பலமுண்டாகுமென்பதும், தன்யோகத்திலுள்ள அதிசயமும் சொல்லப்படுகின்றன.

7. விஞ்ஞானயோகம்—இந்த அத்தியாயத்தில் தனது ஸ்வரூபயாதாத்மியமும் அது பிரகிருதியினால் மூடப்பட்டிருப்பதும், சரணாகதியின் ஸ்வரூபமும், பக்தியின் பேதங்களும் ஞானியின் பெருமையும் சொல்லப்படுகின்றன.

8. அக்ஷரபரப்மயோகம்—இந்த அத்தியாயத்தில்ஐஸ்வர்யம் கைவல்யம், பகவல்லாபம், இவற்றை விரும்பினவர்களுக்குத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களும், உபாதேயமான விஷயங்களும் சொல்லப்படுகின்றன.

9. ராஜவித்தியா ராஜகுஹ்யகோம்—இந்த அத்தியாயத்தில் தன்பெருமையும், மனுஷ்யாவதாரத்திலும் தன்பரத்வமும் மஹாத்மாக்களுக்குள்ள அதிசயமும், பக்தியோகஸ்வரூபமும் சொல்லப்படுகின்றன.

10. விபூதியோகம்-இந்த அத்தியாயத்தில் பகவானுடைய அனந்தகல்யாண குணங்களும், சர்வமும் பகவானுக்கு சுவாதீனமென்பதும், பக்தியுண்டாகி விருத்தியடையும்பொருட்டுச்சொல்லப்படுகின்றன.

11. விஸ்வரூப ஸம்தர்ஸனயோக—இந்த அத்தியாயத்தில் தன் ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தின் பொருட்டு அர்ஜுனனுக்கு திவ்ய திருஷ்டிதானமும், தத்வமும், ஞானதர்ஸனபிராப்திகளுக்கு பக்தியே உபாயமென்பதும் சொல்லப்படுகின்றன.

12. பக்தியோக—இந்த அத்தியாயத்தில் பக்திக்குள்ள சிரேஷ்டத்தை அதில் உண்டாகும் உபாயம், பக்தியோகத்தில் சக்தியில்லாதவனுக்கு ஆத்மநிஷ்டை வேண்டுமென்பது, அதன் வகைகள், பக்தனிடத்தில் பகவானுக்குள்ள பிரீதியின் அதிசயம் ஆகிய இவைகள் சொல்லப்படுகின்றன.

13. க்ஷேத்ரஜ்ஞவிபாகயோக அல்லது பிரகிருதிபுருஷயோக இந்த அத்தியாயத்தில்தேஹாத்மஸ்வரூபங்களைசோதித்துசுத்தாத்மஸ்வரூபத்தை யடைவதற்கு உபாயத்தை நிருபித்து அந்த ஆத்மாவுக்கு அசித்சம்பந்தம் உண்டாவதற்கு ஹேதுவும் சொல்லி அதின் விவேகத்தை அனுசந்திக்கும் விதம் சொல்லப்படுகின்றது.

14. குணத்ரயவிபாகயோக—இந்த அத்தியாயத்தில் பிரகிருதிகுணங்கள் ஜீவனை பந்திக்கிற பிரகாரம் அவற்றுக்குக் கர்த்ருத்வம் உண்டாகும் விதம், அது நிவர்த்திக்கிற மார்க்கம், ஐஸ்வர்ய கைவல்ய மோக்ஷங்கள் தன்னாலேயே உண்டாகுமென்பது இவைகள் சொல்லப்படுகின்றன.

15. புருஷோத்தமப்ராப்தி யோக—இந்த அத்தியாயத்தில் பத்த ஜீவர்களைக்காட்டிலும், முக்தஜீவர்களைக்காட்டிலும் வியாபகனும்பர்த்தாவும் ஸ்வாமியும் ஆகிய புருஷோத்தமன் விலக்ஷணனென்று சொல்லப்படுகிறது.

16. தெய்வ அசுரசம்பத்து விபாகயோக—இந்த அத்தியாயத்தில் சாஸ்திர வஸ்யர்களை தேவர்களென்றும் சாஸ்திர வஸ்யர்களல்லாதவர்கள் அசுரரென்றும் விவரித்து, சாஸ்திர வஸ்யத்வம் உண்டாயிருக்க வேண்டுமென்பது தத்வஞானமும் அனுஷ்டானமும் உறுதிப்படுவதற்காகச் சொல்லப்படுகிறது.

17. சிரத்தாத்ரய விபாகயோக;— இந்த அத்தியாயத்தில் அஸாஸ்திரீயமான ஆஸுரகர்மங்கள நிஷ்பலங்களென்றும், சபலங்களான சாஸ்திரீய கர்மங்கள் குணபேதங்களால் மூன்று விதங்களாயிருக்கின்றனவென்றும் சாஸ்திர விகிதத்திற்குலக்ஷணங்களும் சொல்லப்படுகின்றன.

18. மோக்ஷ சன்யாசயோக—இந்த அத்தியாயத்தில் பகவான் கர்த்தாவென்றும் ஸத்வகுணம் உபாதேயமென்றும் கர்மாநுஷ்டானங்கள் பரிணமிக்கும் விதமும், சாஸ்திர ஸாராத்தமும் நிஷ்கரிக்கப்படுகின்றன ஷெகூறிய 18-அத்தியாயங்களைகீதாஸாஸ்திரம் மூன்று ஷட்கங்கள் அல்லது மூன்று பாகங்களாகச்சொல்லப்பட்டிருக்கிறது முதல் ஷட்கம் (பகவத்கீதையில் முதல்ஆறு அத்தியாயங்கள்.) இந்தஷடகத்தில் யோகபலங்களானஞான கர்மநிஷ்டைகள் ஆத்மாநுபவசித்திக்காக விதிக்கப்பட்டிருக்கின்றன இரண்டாவது ஷட்கம் (ஆறு அத்தியாயங்கள்.) இந்த ஷட்கத்தில் பகவானுடைய ஸ்வரூப யாதாத்மியத்தை யடைந்து அநுபவிப்பதற்கு சாதனமான ஞானகர்மங்களால் உண்டாகிற பக்தியோகம் சொல்லப்படுகின்றது மூன்றாவது ஷட்கம்(கடைசிஆறு அத்தியாயங்கள்.) இந்த ஷட்கத்தில் காரணமான மூலப்ரக்ருதியினுடையவும், ஸர்வேஸ்வரனுடையவும், ஸ்வரூபஸ்வாபாவங்களும் கர்மஞான பக்தியோகவிதங்களும் முன்னேசொன்ன ஷெவிஷயங்கள் தெளிவாகும்பொருட்டு சொல்லப்படுகின்றன. (அடுத்த சஞ்சிகையில் அர்ஜுனனுயை சோகவத்தியாயம் வெளிவரும்.)

நன்மொழி.

ஒருவனை மூடன் அல்லது மடையனென்று நாம் கொள்ளும் எண்ணத்தை, அவன் நமது வார்த்தைக்குள் அடங்கித் திருந்தக் கூடியவனாக இருந்தாலன்றி, எக்காலத்திலும் நாம் கொண்ட எண்ணத்தை அவனுக்கு வெளியிடக்கூடாது.

திருந்தக்கூடாத ஒருவனுக்கு நாம் புத்தி சொல்லப் போனால், அவன் நம்மைக் கடுகடுத்து நம்மீது குற்றம் சொல்லத் தோடங்குவான்.

ஒரு தேசத்தாரையோ, ஒரு ஜன ஸமூகத்தாரையோ, அல்லது தொழிலாளரையோ ஒரேவிதமாகநினைத்துப் பழிக்கக்கூடாது

எவனையும் கோபமூட்டுவதினாலும் பரிகாசம் செய்வதினாலும் நம்முடைய காரியம் பலித்துவிடாது.

கண்களும் காதுகளும் எல்லோருக்கும் உண்டு; ஆனால் நல்ல புத்தி சிலருக்கு மட்டுமே உண்டு.

சமுக ஞானம்.

நல்லொழுக்கம்.

பெரும்பான்மையும் எல்லாச்சாதியாருக்கும் எல்லாச்சமயத்தாருக்கும் பொதுவாயுள்ள நல்லொழுக்கங்களை இயன்றமட்டும் திரட்டிச் சொல்வோம்.

கடவுளும், புண்ணியபாவமும், சுவர்க்கநகரமும், மறுபிறப்பும், முத்தியும் உண்டெனும் உண்மைஒருபோதும் மறக்கலாகாது.

ஒருயிருக்கும் சிறிதாயினும் தீங்கு நினைக்கலாகாது. தனக்குத் துரோகஞ்செய்பவரிடத்தும் தான் துரோகசிந்தை இல்லாதவனாய் இருத்தல்வேண்டும். பிறவுயிர்களுக்குத் துன்பம் வந்தபொழுது தன்னை நெருப்பிலே தோய்த்தாற்போல அதை நீக்க முயலல்வேண்டும். பொறுத்தற்கரிய கோபமும் துன்பமும் வந்தாற் சகித்துக்கொள்ளல் வேண்டும்.

பிறருடைய பொருள்களைக் காஞ்சிரங்காய்போல நினைத்தல் வேண்டும். தனக்குப் பிறர் இலாபங் கருதாமற்செய்த நன்றியை மறக்கலாகாது. வஞ்சனையை ஒழித்தல் வேண்டும். பகைவரும் சிநேகரும் அயலாருமாகிய மூன்று திறத்தாரிடத்தும் பக்ஷபாதமின்றிச் சமமாயிருத்தல்வேண்டும். பிறருடைய கல்வி செல்வ முதலியவற்றைக் கண்டு பொறாமைப்படலாகாது. கல்வியும் அறிவும் நல்லொழுக்கமும் செல்வமும் அழகும் தம்மைப்பார்க்கிலும் பிறருக்கு மிகப் பெருகல்வேண்டுமென்று நினைத்தல்வேண்டும்

காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து பேசலாகாது. விளையாட்டுக்காயினும் பொய் பேசலாகாது; எந்நாளும் சத்தியமே பேசல்வேண்டும். தன்னை வைதவனிடத்தும் கடுஞ்சொற்களைப் பேசாது, இன்சொற்களையே பேசல்வேண்டும். தனக்கும் பிறருக்கும் பயன்படாத வீண்வார்த்தைகளைப் பேசலாகாது. கோண் மூட்டலாகாது.

தலைமையன் மனைவியைக் குருபத்தினியாகவும், பிறர் மனைவியரைத் தாயும் தமக்கையும் தங்கையுமாகவும், பாவித்தல்வேண்டும்.

பிறரிடத்தே குற்றம் உண்டாயின், அவரைத் தனித்தவிடத்திற் கண்டு, அதனையும் அதனால் வருங்கேட்டையும் அவருக்குஅறிவித்து, அவரை நல்வழிப்படுதல் வேண்டும். ஒன்று ஒருவருக்கு மிக அப்பிரியமாய் இருப்பினும், அது அவருடைய நன்மைக்குக் காரணமாய் இருக்குமாயின், அதை ஆவசியகமாகச் சொல்லல் வேண்டும்.

ஈசுரத்துரோகி' கொலைஞன், கள்வன், கள்ளுண்போன் பொய்யன், சூதாடுவோன், தூர்த்தன், வஞ்சகன் பொறாமையுடையவன், புறங்கூறுவோன், பலரோடு பகைகொண்டவர், மிகச் செலவுசெய்பவன், பைத்தியம் பிடித்தவன் என்பவர்களோடு கூடலாகாது.

தனக்கு மந்திரங்களையேனும் சாஸ்த்திரங்களையேனும் உபதேசிக்குங் குருவை அன்போடு வழிபடல்வேண்டும். குருவுக்கு வழிபாடு செய்யாது பெறும் வித்தை சித்திபெறாது. கிரியை ஞானம் என்னும் இருவருள்ளும் ஞானகுருச் சிறந்தவன். அதிகமாகவேனும் அற்பமாகவேனும் ஆன்மா உய்யும் வழிக்கு உரியதை அறிவித்தவனையும் குருவென்றே நினைத்தல்வேண்டும். சமயச் சடங்கு செய்விப்பவரும் ஆசாரியரேயாவர்; அவரிடத்தும் வழிபாடுசெய்தல்வேண்டும். குருவின் ஆசனத்திலும் படுக்கையிலும் இருத்தலும் படுத்தலும், அவைகளைக் காலினாலே தீண்டலும் ஆகாவாம்.

தகப்பன், தாய், பெரியதகப்பன், சிறியதகப்பன், பெரியதாய், சிறியதாய், பாட்டன், பாட்டி, மாமன், மாமி, தமையன் தமையன்மனைவி, குரு, குருபத்தினி, உபாத்தியாயர்முதலிய பெரியோர்கள் வந்தால், இருக்கைவிட்டெழுந்து வந்தனஞ்செய்தல்வேண்டும். வயசினாலும் கல்வியினாலும் முதிர்ந்த பெரியோர்கள் வரும்போது, சிறியவன், இருக்கைவிட்டெழும்பாதிருந்தால், அற்பாயுசை அடைவான். பெரியோர்களை நாடோறும் வந்தனஞ்செய்பவனுக்கு, ஆயுள், கல்வி, கீர்த்தி, பலம் என்னுநான்கும் அபிவிர்த்தியாகும்.

தன்னின் உயர்தாரையாயினும், தன்னை ஒத்தாரையாயினும் வணங்கும்போது, அவ்வணக்கம் அவருக்கென்று புத்திபண்ணாமல்

அவரிடத்தில் இருக்கும் கடவுளுக்கென்று புத்திபண்ணி வணங்கல் வேண்டும். தன்னையாராயினும் ஒருவர் வணங்கும்போது, 'இவ் வணக்கம் ஆன்மாவாகிய நமக்கன்று; நம்மிடத்தில் இருக்கும் கடவுளுக்கேயாம்' என்று புத்திபண்ணல்வேண்டும்.

ஒருவர் கும்பிட்டதற்கு பதில் வணக்கஞ்செய்யாமலிருக்கப் படாது.

பிள்ளை வளர்ப்பு.

ஆஹாரஸ்ய பரம்தாம வீர்யம் தத்ரக்ஷ்ய மாத்மனஹ
க்ஷயோயஸ்ய பஹூன்ரோகான் மரணம் சநியச்சதி

இவ்வுலகத்தில் புத்திபுள்ள ஒவ்வொரு மனிதனும் தனது ஆகாரத்தினால் உண்டாகும் மேலான அம்சமாகிய தனது தாதுவைக்கூடிய மட்டும் காப்பாற்றவேண்டும். ஏனெனில் தாதுத்திரவம்கெட்டுப்போவதால் அநேகம் வியாதிகள் உண்டாகி அவைகள் முடிவில் மரணத்துக்கேதுவாகின்றன.

பிரமசரியம்.

இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனுடைய பிரதம கடமை யென்னவென்றால், தன் தேகதத்துவத்தைச் சீராய்க் காத்துக் கொள்வதேயாம். ஏனெனில் தேகம் சவுக்கியமாயிருந்தால் மாத்திரமே ஒரு மனிதன் செய்யக்கோரும் எல்லாவற்றையும் நிறை வேற்றச்சக்தியுள்ளவனாகின்றான். ஆயுர்வேதத்தில் சவுக்கியத்துக் காகச் சொல்லியிருக்கும் விதிகளைப்பற்றிப் பூரண ஞானம் அடைய வேண்டும்.

ஏனெனில் வைத்திய வித்தையில் விதித்திருக்கும் கட்டளையை அறியாமலும் உண்மையாகவே அவைகளின்படி நடவாமலும் இருந்தால் சௌக்யத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

ஆயுர்வேதத்தின்மேல் நாம் கவனம் செலுத்தினால் அதில் அநேகம் நிபந்தனைகள் காணலாம். ஆனால் பிரமசரியம் அவை களில் பிரதானமானது. இதில் அது கொஞ்சம் விரிவாய்ப் பிரஸ் தாபிக்கப்பட்டிருக்கிறது. பிரமசரியத்தைச் சரியாய்க் கவனித்

தால் அது உயிருக்கு ஆதாரமாயிருக்கும் தாதுவைப் போஷிக்கச் செய்யும். ஆகையால் முதலாகப் பிரமசரியத்தைப் பற்றியும், அதன் பேதங்களைப் பற்றியும் பொதுவான அபிப்பிராயம் கொள்வது மிக்க அவசியம்.

பிரமசரியத்தின் பொதுவான கொள்கை.

ஸ்திரீயை மனத்தில் ஸ்மரிக்காமை. அவளோடு சம்பாஷிக்காமை. காமப் பார்வை கொண்டு நோக்காமை. அவளை ஸ்பரிசியாமை. ஆகிய இவைகள் பிரமசரியத்தின் பொது தன்மையாம்.

பிரமசரியத்தில் எட்டுவகைகளுண்டு. பூர்வகாலங்களில் அது ஒருவனது எட்டாம் வயது முதல் இருபத்து நான்காம் வயது வரையில் வேதாப்பியாசத்தோடு அனுஷ்டிக்கப்பட்டது. பிரமசரியம் அதற்குரிய தன்மைகளோடு சேர்க்கப்பட்டபோது, மனிதர்கள் தங்கள் விந்துவைத் தங்களது இருபத்து நான்காம் வயது வரையில் சிதறாமல் சேர்த்துப்பிடித்து வைத்திருந்தார்கள். இக்காலத்திலோ, பிரமசரியம் மேற்சொன்னபடி பூர்த்தியாய் அனுஷ்டிக்கப்படாமையால், பத்து அல்லது பன்னிரண்டாம் வயதிலேயே காது பாழாக ஆரம்பிக்கின்றது.

முற்றப்பெறாத இந்திரியம் சிதறிப்போவதால், பலம், மனோதத்துவம், வீரத்வம் வைராக்கியம், அழகு ஞாபகசக்தி இவைகளை இழந்துபோக வேண்டியதாயிருக்கிறது. ஆகையால் காமவின்பத்தை அனுபவிக்கவும் நீண்ட ஆயுளோடிருக்கவும், சகல வியாதிகளினின்றும் நீங்கியிருக்கவும் விரும்புகிறவர்களெல்லோரும் பிரமசரியத்தை அநுசரிக்க வேண்டியது அதி முக்கியமானது. அதை அப்பியசிக்க அடியிற் சொல்லுமாறு எட்டு அமிசங்களையும் கவனிக்கவேண்டும்.

பிரமசரியத்தின் எண்வகைகள்.

1. யாதொரு ஸ்திரீயையும் நினையாமை.
2. ஸ்திரீயின் சிலாக்கியத்தைப்பற்றி வர்ணிக்காமை.
3. ஸ்திரீயோடு ஸரஸமாடாமை.
4. காமக்கண்ணோடு ஒரு ஸ்திரீயைப் பார்க்காமை.
5. ஒரு ஸ்திரீயோடு அந்தரங்க வார்த்தை யாடாமை.

6. ஒரு ஸ்திரீயைப்பற்றிய ஞாபகமே கொள்ளாமை.
7. ஒரு ஸ்திரீயோடு பரஸ்பரதரிசனம் பண்ணுமை.
8. ஒரு ஸ்திரீயை எவ்விதமாயும் தொடாமை.

பிரமசரிசம் அனுஷ்டிப்பதினுல் உண்டாகும் நலங்கள்.

பிரமசரியத்தை மேல்சொன்ன எட்டு பேதங்களோடு சரிய யனுசரிப்பதால், தாதுத்திரவம் முழுதும் உருவாகித் தகுதியான வயதில் புறப்படும்படி யாவதல்லாமல், நீடித்துக் காப்பாற்றிய இந்திரியம், வலுவையும் மனேசக்தியையும் அதிகரித்து, சௌந்தரியமும் பிரகாசமுமுண்டாகிக் கீல்களை உரப்படுத்தி, இன்பங்களை அனுபவிக்கச் செய்து ஜீவகாலத்தின் வியவஹாரங்களில் ஊக்கமுண்டாகி நீடித்த ஆயுளுங்கொடுக்கும். அபக்குவமான தாதுத்திரவம் வீணுவதால், கணுக்கள் தளர்ந்து; மனம் எப்போதும் வியாகூலம் பிடித்து ஜீவசதையிலுள்ள காரியங்களில் வெறுப்புண்டாய்க் கடைசியில் ஆயுளும் குறைந்து மரணம் சம்பவிக்கும் தொடரும்

ரஞ்சிதம்.

சமயம் என்பது ஒருவன் தானனுஷ்டிக்க வேண்டிய சுய தர்மம்.

சமூகம் என்பது பொது மக்கள் வாழ்வுக்கு மேற்படாத பொது தர்மம்.

அரசியல்:—சமயத்தையும் சமூகத்தையும் வளர்க்கவும் காப்பாற்றவும் கூடியதர்மம்.

சமயபிரச்சினை.

நாகரீகம்:—இக்காலத்தில் பலமதங்கள் ஒன்றுபட்டு வாழ வேண்டியிருப்பதால் ஞானத்துக்கு பங்கமுண்டு பண்ணக்கூடிய காரியங்களெல்லாம் நீக்கல் வேண்டும்.

1. நெற்றியில் பொட்டு, நாமம், விபூதி யணிவது அல்லது சூன்யமான முகத்தோடு யிருப்பது எம்மதத்தினருக்கும் உற்றதே அவரவர்கள் தங்கள் மனேசக்திக்கேற்ற வாறு நடந்து கொள்ள

ஜோதிடம்! ஜோதிடம்!!

உங்களுடைய எதிர்கால சம்பவங்களை தெரிந்துகொள்ள வேண்டுமா? அப்படியானால் அடியில்கண்ட விலாசத்துக்கு ஐந்து ஆருட கேள்விகளை எழுதி கவருக்குள் வைத்து சீல்செய்து அனுப்புங்கள். மறு தபாலில் உங்கள் சீல் கவருடன் கவருக்குள் நீங்கள் எழுதிய கேள்விகளின் பதிலும் உங்களுக்குக் கிடைக்கும். ஆனால் களவு சட்டவிரோதமான கேள்விகளை எழுதக்கூடாது. பரீக்ஷை செய்யக்கூடிய கேள்விகளுக்கு பதில் எழுதப்படமாட்டாது. கவரின்மேல் நீங்கள் பிறந்த வருஷ, மீ, தேதி, நாழிகையாவது கேள்வி எழுதிய நேரமாவது கட்டாயம் எழுதவும்.

1 முதல் 5 கேள்விகளுக்கு ரூ. 1. (ஒன்று) 5-க்குமேல் பிரதிகேள்விக்கும் அணா 8. தசாபுக்தி அந்தரம் வாரியாக ஒருவருஷ பலன் எழுதியனுப்ப ரூ. 5 (ஐந்து). கோசாரபலன் 1 வருஷத்திற்கு அணா 10. வெளிநாடுகளுக்கு இரட்டிப்பு கட்டணம்.

நற்சாட்சிப் பத்திரங்கள்.

(1) கோயில்குண்டலா கர்னூல் 5—2—1923

அன்புள்ள ஐயா, தாங்கள் எனக்கு 1923-ம் வருஷம் ஜனவரிமீ 17உ 1152 நெ. கடிதத்தில் எழுதியனுப்பியபடியே நான் மரக்காபூரிலிருந்து கோயில்குண்டலாவுக்கு மாற்றப்பட்டேன்.

(ஒப்பம்) சி. துரைசாமி நாயுடு,
போலீஸ் சர்கிள் இன்ஸ்பெக்டர்.

(2) 396, நெ. 3-வது மெத்தை, தங்கசாலை தெரு, சென்னை 9—6—23.

எனதருமை நண்பருக்கு, எனது தற்கால நிலைமையைப்பற்றி தாங்கள் எழுதியது எல்லாம் சரியே. தவிர ஜூன்மீ முதல் 18உ வரையில் தாங்கள் சொல்லியபடியே நடக்கின்றன. பிற்காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்களை முற்கூறி அபாயங்களிலிருந்து ஜனங்களை தப்பும்படி தாங்கள் செய்வதை நான் ரொம்பவும மெச்சுகிறேன்

(ஒப்பம்) ஸ்ரீனிவாசபகவத்ஸ்வாமி

(3) ஜக்ஜீவன் தயால் பங்களா, காட்கோபார் 31—12—1922

ஐயா, நான் எழுதியனுப்பின ஐந்து கேள்விகளுக்கும் சரியானபதில் அனுப்பியதற்கு ரொம்பவும் சந்தோஷம். தாங்கள் பதிலைப்பார்த்து ரொம்பவும் திருப்தியடைந்தேன்.

(ஒப்பம்) தனேசுவரவஜிரார்.

T. S. கிருஷ்ணசாமி அய்யர் ஜோதிஷர்,
விழுப்புரம் போஸ்டு, **S. I Ry.**